தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை 1974 ஏப்ரல் 1.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானம்.

வினா நேரத்தைத் தள்ளி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 22-ம் விதியின் கீழ், முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள்" என்று உள்ளதை இன்று தள்ளிவைத்து, நிகழ்ச்சி நிரலில் அடுத்து உள்ள "மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்" என்றுள்ளதை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் முன் மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எடுத்துக்கொள்வதாக இருந்த வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

2. நடைமுறைக் கேள்வி.

வினா நேரத்தை நிறுத்தி வைக்க பேரவை அனுமதியளிக்கும் முன்னரே, வினா நேரம் இல்லை என உறுப்பினர்களுக்கு மடல் அனுப்பியது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Yesterday, we had received a communication from the Assembly Office that the Question Hour would be suspended and probably that was discussed in the meeting of the Business Advisory Committee and I am not going into it. The normal practice is that such a communication is not sent to us before the House decides that the Question Hour should be suspended. As such a communication has been sent to us before the decision of the House, it would amount to almost a contempt of the House. I am just bringing this to the attention of the Hon. Speaker to point out that it was irregular on the part of the Department to have sent as a communication that the Question Hour would be suspended.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]